# ஏப்ரல் - 08 - சனி

**புனித பெர்பேத்துஸ்**

**"மரியாவிடம் வந்திருந்த யூதர் இயேசு செய்வதைக் கண்டு அவரை நம்பினர்" (யோவா:11:45)**

## முதல் வாசகம்: எசேக்கியல்37 : 21 – 28

அவர்களுக்குச் சொல் தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே: இதோ நான் இஸ்ரயேலர் சிதறுண்ட நாடுகளிலிருந்து அவர்களை அழைத்து எம்மருங்கினின்றும் கூட்டிச் சேர்த்து, அவர்களின் சொந்த நாட்டிற்குக் கொணர்வேன். இஸ்ரயேலின் மலைகள்மீது அவர்களை ஒரே நாட்டினர் ஆக்குவேன். அவர்கள் எல்லாருக்கும் ஒரே அரசன் இருப்பான். அவர்கள் இனிமேல் ஒருபோதும் இரு நாடுகளாகவோ இரு அரசுகளாகவோ பிரிந்திரார். அவர்கள் இனிமேல் ஒருபோதும் தங்கள் தெய்வச் சிலைகளாலோ இழிந்த அருவருப்பான பொருள்களாலோ தங்கள் வேறெந்தக் குற்றங்களாலோ தங்களைத் தீட்டுப்படுத்திக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் பாவம் செய்த எல்லாக் குடியிருப்பு களிலிருந்தும் அவர்களை நான் மீட்டுத் தூய்மையாக்குவேன். அவர்கள் எனக்கு மக்களாய் இருப்பர் நான் அவர்களுக்குக் கடவுளாய் இருப்பேன். என் ஊழியன் தாவீது அவர்களுக்கு அரசனாய் இருப்பான். அவர்கள் அனைவருக்கும் ஒரே ஆயன் இருப்பான். என் நீதிநெறிகளின்படி அவர்கள் நடப்பர் என் நியமங்களைக் கருத்தாய்க் கடைப்பிடிப்பர். நான் என் ஊழியன் யாக்கோபுக்குக் கொடுத்ததும், உங்கள் மூதாதையர் வாழ்ந்தது மாகிய நாட்டில் அவர்கள் வாழ்வர். அவர்களும் அவர்களின் மக்களும், மக்களின் மக்களும் அங்கு என்றென்றும் வாழ்வர். என் ஊழியன் தாவீது என்றென்றும் அவர்களின் தலைவனாய் இருப்பான். நான் அவர்களுடன் நல்லுறவு உடன்படிக்கை செய்துகொள்வேன். அது அவர்களுடன் என்றென்றும் நிலைத்திருக்கும். நான் அவர்களை நிலைபெறச் செய்து அவர்களைப் பெருகச் செய்வேன். என் தூயகத்தை அவர்கள் நடுவே என்றென்றும் நிலைக்கச் செய்வேன். என் உறைவிடம் அவர்கள் நடுவே இருக்கும் நான் அவர்களுக்குக் கடவுளாய் இருப்பேன் அவர்கள் எனக்கு மக்களாய் இருப்பர். என் தூயகம் அவர்கள் நடுவே என்றென்றும் நிலைத்திருக்கையில், இஸ்ரயேலைத் தூய்மைப்படுத்துபவர் ஆண்டவராகிய நானே என வேற்றினத்தார் அறிந்து கொள்வர்.

**பதில்பாடல் :** ஆயர் தம் மந்தையைக் காப்பது போல் ஆண்டவர் நம்மைக் காத்திடுவார்

## நற்செய்தி: யோவான் 11: 45 – 56

அக்காலத்தில் மரியாவிடம் வந்திருந்த யூதர் இயேசு செய்வதைக் கண்டு அவரை நம்பினர். ஆனால் அவர்களுள் சிலர் பரிசேயரிடம் சென்று இயேசு செய்வதைத் தெரிவித்தனர். தலைமைக் குருக்களும் பரிசேயரும் தலைமைச் சங்கத்தைக் கூட்டி, "இந்த ஆள் பல அரும் அடையாளங்களைச் செய்து கொண்டிருக் கிறானே, என்ன செய்யலாம்? இவனை இப்படியே விட்டுவிட்டால் அனைவரும் இவனிடம் நம்பிக்கை கொள்வர். அப்போது உரோமையர் வந்து நம் தூய இடத்தையும் நம் இனத்தையும் அழித்து விடுவார்களே!" என்று பேசிக் கொண்டனர். கயபா என்பவர் அவர்களுள் ஒருவர். அவர் அவ்வாண்டின் தலைமைக் குருவாய் இருந்தார். அவர் அவர்களிடம், "உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. இனம் முழுவதும் அழிந்து போவதைவிட ஒரு மனிதன் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது என்பதை நீங்கள் உணரவில்லை" என்று சொன்னார். இதை அவர் தாமாகச் சொல்லவில்லை. அவர் அவ்வாண்டின் தலைமைக் குருவாய் இருந்ததால், இயேசு தம் இனத்திற்காவும், தம் இனத்திற்காக மட்டுமின்றி, சிதறி வாழ்ந்த கடவுளின் பிள்ளைகளை ஒன்றாய்ச் சேர்க்கும் நோக்குடன் அவர்களுக்காகவும் இறக்கப்போகிறார் என்று இறைவாக்காகச் சொன்னார். ஆகவே, அன்றிலிருந்தே அவர்கள் இயேசுவைக் கொன்றுவிடத் திட்டம் தீட்டினார்கள். அது முதல் இயேசு யூதரிடையே வெளிப்படையாக நடமாடவில்லை. அவர் அவ்விடத்தினின்று அகன்று பாலை நிலத்திற்கு அருகிலுள்ள பகுதிக்குப் போனார் அங்கு எப்ராயிம் என்னும் ஊரில் தம் சீடருடன் தங்கியிருந்தார். யூதர்களுடைய பாஸ்கா விழா அண்மையில் நிகழவிருந்தது. விழாவுக்குமுன் தங்கள் தூய்மைச் சடங்குகளை நிறைவேற்றப் பலர் நாட்டுப் புறங்களிலிருந்து எருசலேமுக்குச் சென்றனர். அங்கே அவர்கள் இயேசுவைத் தேடினார்கள். "அவர் திருவிழாவுக்கு வரவே மாட்டாரா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கோவிலில் நின்றுகொண்டிருந்தவர்கள் தங்களிடையே பேசிக் கொண்டார்கள்.

**தியானம்:** பாவமே மனிதனை கடவுளிடமிருந்து பிரித்து வைக்கின்றது. இதை அறிந்திருந்தும் மனிதன் தன்னுடைய பலவீனத்தினால் மீண்டும் மீண்டும் பாவத்தில் வீழ்ந்து கடவுளின் அருளை இழந்து போகின்றான். "எல்லோரும் பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர்" (உரோ 3:23) என்று பவுலடியாரும் இந்த உண்மையை உரக்கச் சொல்லுகின்றார். கடவுளின் அருளை இழப்பது என்பது அவருடைய பிரசன்னத்தை, உடனிருப்பை இழப்பது. ஆதாம் ஏவாள் பாவம் செய்த போது அவர்கள் கடவுளின் திருமுன்னிலையில் இருந்து விரட்டியடிக்கப் படுகின்றார்கள். (தொநூ 3:24) இதுதான் அவர்களுக்குக் கிடைத்த மிகப்பெரும் தண்டனை. பாவத்தினால் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே ஏற்பட்ட பிளவை சரிசெய்வதற்காக இரக்கம் நிறைந்த கடவுள் தன்னுடைய ஒரே மகனை இந்த உலகிற்கு அனுப்புகின்றார். "இரத்தம் சிந்தி மனிதனுடைய பாவத்திற்கு கழுவாய் ஆகுமாறு இயேசுவைக் கடவுள் நியமித்தார்" (உரோ 3:25). எனவே ஆண்டவர் இயேசுவின் வழியாக மனிதனோடு தம்மை ஒப்புரவாக்கி மீண்டும் தம்முடைய பிரசன்னத்தை, உடனிருப்பை மனிதனுக்கு உறுதி செய்கின்றார். இயேசுவின் இரத்தத்தாலும் அவருடைய பாடுகளாலும் பாவத்தில் கழுவப்பட்டு தூய்மையாக்கப்பட்ட நாம் நம்மையே மீண்டும் பாவத்திற்கு விற்றுப் போடாமல், ஒவ்வொருநாளும் நம்மை அவருடைய தூய பரிசுத்த இரத்தத்திற்கு ஒப்புக்கொடுத்து அவருடைய பிரசன்னத்தில் வாழ முயற்சிப்போம். ஒவ்வொருநாளும் திருப்பலியில் கலந்துகொண்டு அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனம் பெற்று நம்முடைய பலவீனத்தால் மீண்டும் பாவத்தில் விழுந்து நமது ஆன்மாக்களைக் கறைபடுத்திக்கொள்ளாமல் பாதுகாத்து தூய்மையில் வாழுவோம். ஏனெனில் "தூய்மையின்றி எவரும் கடவுளைக் காணமாட்டார்கள்" (எபி 12:14) என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப நம்மை அழைத்த ஆண்டவர் இயேசு தூய்மையுள்ளவராய் இந்த உலகில் வாழ்ந்ததைப்போல நாமும் நம்முடைய சிந்தனை, சொல், செயல் இவற்றிலெல்லாம் தூய்மையுள்ளவர்களாய் வாழ்ந்து இயேசுவின் பிரசன்னத்தை இழந்துவிடாமல் காப்பாற்றிக்கொள்வோம்.